**சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி - 2024**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகலவிரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின், 2007 ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனியிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை கம்பனியால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 வரிப் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கம்பனியின் தோட்டங்களைச் சார்ந்த மணல் விற்பனை தொடர்பாக இன்வொயிஸ்கள் வழங்கும் போது பெறுமதி கூட்டிய வரி | டென்டர் அழைப்பின் போது கனிமங்களின் பெறுமதி மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் அதன் மீது சமர்ப்பித்திருந்த | முறையான விசாரணையொன்று மேற்கொண்டு ஒப்பந்தக்காரரிடம் |

| | | |
|---|---|---|
| (VAT) ரூபா 1.8 மில்லியன் தொகை ஒப்பந்தக்கார்களிடம் அறவீடு செய்திருக்காததுடன், அந்த வரித் தொகையை கம்பனியினால் செலுத்தியிருந்தது. | கூறுவிலைகளுக்காக உடன்படிக்கை மேற்கொள்ளும் போது கடைபிடிக்கப்பட்டதுடன், பெருந்தோட்டக் கம்பனிகள் வரி செலுத்துவதற்காக பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்றாக காணப்படுவதனால் விற்பனை விலை வரியுடனான விலை என கணித்து அந்த வருமானம் மீது குறிப்பிட்ட வட் வரி 18 சதவீதம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டது என. | அறவிடப்படாத வரித் தொகையினை குறிப்பிட்ட பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 138.37 மில்லியனிற்கான நட்டமொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 231.73 மில்லியன் தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 370.1 மில்லியனிற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. அந்த பின்னடைவிற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதி வருமானம் ரூபா 119 மில்லியனினால் குறைவடைதல், வருமான வரிச் செலவு ரூபா 287 மில்லியன் தொகை அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

| விடயம் | 2024 (ரூபா) | 2023 (ரூபா) | முரண் (ரூபா) | முரணின் சதவீதம் நூற்றிற்கு |
|---|---|---|---|---|
| வருவாய்கள் | 961,593,165 | 885,350,241 | 76,242,924 | 8.61 |
| நிதி மற்றும் ஏனைய வருமானங்கள் | 238,011,756 | 341,545,704 | (103,533,948) | (30.31) |
| விற்பனைக் கிரயம் | 722,205,190 | 657,567,338 | 64,637,852 | 9.82 |
| நிருவாகச் செலவு | 179,497,864 | 205,069,246 | (25,571,382) | (12.46) |
| நிதிச் செலவு | 78,695,020 | 61,652,953 | 17,042,067 | 27.64 |

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டின் நடைமுறை மற்றும் திடீர் சொத்து விகிதாசாரம் 7:1 மற்றும் 6:1 தொகையாக காணப்பட்டதுடன், கடந்த ஆண்டின் போது அந்த விகிதாசாரம் 4:1 மற்றும் 3:1 ஆக காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது மொத்த இலாப விகிதாசாரம் 25 சதவீதமாக காணப்பட்டதுடன், கடந்த ஆண்டில் அந்த விகிதாசாரம் 26 சதவீதத்துடன் ஒப்பீடு செய்யும் போது மொத்த இலாப விகிதாசாரம் 01 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது தேறிய இலாப விகிதாசாரம் 14 சதவீதமாக காணப்பட்டதுடன், கடந்த ஆண்டில் அந்த விகிதாசாரம் 26 சதவீதத்துடன் ஒப்பீடு செய்யும் போது தேறிய இலாப விகிதாசாரம் 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைததுவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 ஆண்டின் போது கம்பனியினால் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி, இலங்கை பெருந்தோட்டக் கம்பனி, அரச வளங்கல் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு மற்றும் இறப்பர் உற்பத்தி ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் ஆகிய 05 நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த ரூபா 105 மில்லியனிற்கான கடன் தொகை மற்றும் அதற்காக ரூபா 91.5 மில்லியமனிற்கான வட்டித்தொகையில் மொத்தம் ரூபா 196.5 மில்லியன் தொகை மீளாய்வாண்டு இறுதியளவில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2014 வருடாந்த கணக்கறிக்கையில் இந்த கடன் தொகை மற்றும் வட்டி தொகைக்காக ஐயக் கடன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இந்த கடன்தொகையை அறவீடு செய்வதற்காக தொடர்ச்சியாக முயற்சி எடுககபப்பட்டு வருகின்றது என. | கம்பனி குறிக்கோள்களுக்கு அடங்காக முறையில் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க மற்றும் கடன்தொகை மற்றும் வட்டியை கால ரீதியான அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறைப் பிரகாணம் நடவடிக்கை எடுப்பதற்காக செயற்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய தென்னை பயிர்ச் செய்கை தினத்திற்காக 2023 ஆண்டின் போது பளை தோட்டத் தொகுதிக்கு சொந்தமான 20 ஏககர் காணியை அபிவிருத்தி செய்து தென்னை பயிரச் செய்கைக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு மற்றும் அதற்கு ஒத்த நிகழ்வாக நாடாத்தப்பட்ட ஆரம்ப விழாவிற்காக காணியை தயார் படுத்தல், வேலியை தயாரித்தல், எரிபொருள் மற்றும் ஏனைய செலவுகள், உபகரணங்கள் கொள்வனவு செய்தல், உணவு தங்குமிட வசதிகள் வழங்குவதற்காக ரூபா 5.19 மில்லியன் தொகை செலவொன்று சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியினால் செலவிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டம் செயற்படுத்தப்படாமையால் செலவிடப்பட்ட மேற்கூறிய செலவுகள் விளைவற்றதாகியது. | சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியினால் பளைத் தோட்டத்தில் கன்றுகள் எண்ணிக்கையொன்று நடுவதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும், பின்னைய காலத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் அந்த காணிகள் வட மாகாணத்தில் காணிகளை இழந்த குடும்பங்களுக்கு பகிர்ந்து கொடுக்கும் திட்டமொன்று காணப்பட்டதுடன் அது தொடர்பாக ஏற்பட்ட சிக்கல்களை தீர்த்துக்கொள்ளும் வரை எந்தத் தரப்பினருக்கும் அந்த தோட்டத்திற்கு உட்புகுவதை தவிர்த்துக்கொள்ளும் படி பொலிஸ் நிலையத்தினால் அறிவிக்கப்பட்டதனால் அந்த 20 ஏக்கர்களையும் அபிவிருத்தி செய்யும் அலுவல்களை பூர்த்தி செய்வதற்கு முடியவில்லை என. | முறையான விசாரணையொன்று மேற்கொண்டு திட்டமிடப்படாத செயற்திட்டங்களுக்காக செலவுகள் மேற்கொண்ட பொறுப்பான நபர்களை இனங்கண்டு கம்பனியினால் செலவிடப்பட்ட தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பலுகஸ்வெவ தோட்டத் தொகுதியில் மீளாய்வாண்டு இறுதியளவில் தேய்காய் எண்ணெய் உற்பத்தியின் மூலம் ரூபா 1.24 மில்லியன் நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன், அந்த உற்பத்தியை இலாபகர நிலைமைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேய்காய் எண்ணெய் உற்பத்தி அனுகூலமற்றதாக காணபட்ட போதிலும், அரச பெருந்தோட்ட கம்பனி என்ற வகையில் நுகர்வோருக்கு தரமான உற்பத்தியை வழங்கும் குறிக்கோளுடன் மற்றும் தொடர்ச்சியாக உற்பத்தியை நடாத்திச் செல்லும் குறிக்கோளுடன் தேங்காய் எண்ணெய் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது என. | தேங்காய் எண்ணெய் உற்பத்தி இலாபகரத் தன்மைக்கு மாற்றுவதற்கு முறையான வேலைத் திட்டமொன்று தயாரித்து செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | கம்பனி உற்பத்திகளின் வருமானங்கள் மற்றும் செலவுகள் கிரயங்கள் தயாரிக்கும் போது விற்பனவுக் கிரயம் வருமானத்தின் 50 சதவீதத்தை விட கூடிய சதவீதமொன்று காணப்படுகின்ற 08 விடயங்கள் காணப்பட்டன. அது 54 முதல் 1253 வரையான வீச்சில் காணப்பட்டது. 03 விடயங்களின் விற்பனைக் கிரயம் வருமானத்தை மிகைத்திருந்ததுடன், மேலும், கிரயத்தை குறைத்து உற்பத்திகளை இலாபகரத் தன்மைக்காக மாற்றுவதற்கு கம்பனியினால் முறையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | 2024 ஆண்டின் தேங்காய் மற்றும் கொப்பரா மொத்த இலாப வீதாசாரம் 03 சதவீதத்தினாலும் மற்றும் பண்ணை விலங்குச் செயற்திட்டம் 04 சதவீத்தினாலும் அதிகரித்திருந்ததுடன், விற்பனை செய்யப்படாத தென்னங் கன்றுகளை ஏடுகளில் இருந்து பதிவழித்தல், நாற்று மேடைகளின் விற்பனைக் கிரயம் அதிகரித்தலுக்கான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததெனவும், மிளகு விளைச்சல் குறைவடைவதற்கு உரப் பற்றாக்குறை மற்றும் தீங்கான காலநிலைத் தாக்கங்கள் காணப்பட்டதெனவும், தேங்காய் உற்பத்திக் கிரயாம் அதிகரிப்பதற்கு தேங்காய் ஒன்றின் விற்பனை விலை அதிகரிப்பதற்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததெனவும், மரமுந்திரிகை பற்றாக்குறையினால் விலை அதிகரித்தலும், உள்ளீட்டுச் செலவுகள் அதிகரிப்பதற்காக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததெனவும், மரக்கறிகளின் விலை தொடர்ச்சியாக தளம்பல் அடைவதனால் மரக்கறி உற்பத்திக் கிரயம் கூடிய பெறுமதியொன்றினை கொண்டிருந்தது. | உற்பத்திகளின் இலாபகரத் தன்மையை அதிகரித்ததுக் கொள்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்றை தயாரித்து செயற்படுத்த வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனிக்கு சொந்தமான தென்னங் காணிகளில் விளைச்சல் குறைவாக காணப்பட்டதால் கனிய மணல் கலந்த மண்ணினை அகற்றி தென்னங் கன்றுகளை நட்டு காணியை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட செய்திட்ட முன்மொழிவின் படி முக்குதொடுவாவ தோட்டத் தொகுதியில் மணல் அகற்றும் கட்டம் 1 மற்றும் 2 செயற்திட்டங்கள் தனியார் ஒப்பந்தக்காரர் இருவருக்கு சாட்டப்பட்டு 2021 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தை அங்கீகரித்த அரச நிறுவனம் அங்கீகாரம் வழங்கும் போது முறையான ஆய்வொன்று மேற்கொண்டிருந்ததென மற்றும் செயற்திட்டம் செயற்படுத்தும் போது முறையான கண்காணிப்பொன்று மேற்கொண்டிருந்ததென கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. நிலத்திலிருந்து அகற்றப்பட்டு எடுத்துச் செல்லும் மண் எண்ணிக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளல் உட்பட செயற்திட்டத்தின் கண்காணிப்பு அலுவல்களுக்காக முறையான உள்ளகக் கட்டுப்பாடொன்று நிறுவியிருக்காததுடன், பொருத்தப்பட்டிருந்த CCTV முறைமையிலும் ஒரு மாதத்திற்கான தரவுகள் மாத்திரம் பதியப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் கட்டம் 01 மற்றும் 02 இன் கீழ் ஒப்பந்தக்காரரினால் அகற்றப்பட்டிருந்த 11,792.2 கியுப் மண்ணிற்காக கம்பனி ரூபா 84.5 மில்லியன் தொகை அறவீடு செய்திருந்த போதிலும், மண் குறுக்குவெட்டு அளவீட்டின் படி கனிய மணல் கலந்த மண் 71,888 கியுப்கள் நிலத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேலதிகமாக அகற்றப்பட்டிருந்த கனிய மணல் கலந்த மண் 60,095.8 கியுப் மற்றும் அதற்குரிய 50 சதவீத மிகை | அங்கீகாரம் இன்றி அகற்றப்பட்டிருந்த மணல் கலந்த மண்ணிற்காக 50 சதவீத மிகை விதிப்புடன் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 650.55 மில்லியன் தொகையாகும். ஏற்பட்டுள்ள நிதி நட்டம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு எழுத்துமூலம் முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், இரண்டு ஒப்பந்தக்காரர்களுக்கு எதிராக உடன்படிக்கையின் பிரகாரமும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதெனவும், செயற்திட்டத்திற்கு பொறுப்பாக இருக்கின்ற மூன்று தோட்ட உத்தியோகத்தர்களின் சேவையை இடைநிறுத்தப்பட்டு முறையான ஒழுக்காற்று விசாரைண மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | முறையான விசாரணை நடாத்தி, சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களுக்கு அறிவித்து அரசிற்கு ஏற்பட்டுள்ள நட்டம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்து பொறுப்பான தரப்பினருடன் அறவீடு செய்ய வேண்டியதுடன், குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். அதேபோல், நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விதிப்புடன் ரூபா 650.55 மில்லியன் தொகையினை அறவீடு செய்வதற்கு கம்பனியினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. நிலத்திலிருந்து மண் அகற்றப்பட்டு 04 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், தென்னங் கன்றுகள் நட்டு நிலத்தினை அபிவிருத்தி செய்வதற்கு கம்பனியினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையினால் 2023 பெப்ரவரி 29 திகதி சிலாபம் பெருந்தோட்ட கம்பனிக்கு உரித்தாக்கியிருந்த கிளிநொச்சி மாவட்ட பளை பிரதேசத்தில் உள்ள தொட்டம குளம் நிர்மாணித்தல் தொடர்பாக ஒப்பந்தக்காரரினால் 2023 மார்ச் 01 திகதி முதல் 2024 ஒக்தோபர் 30 திகதி வரை 11,556 மணல் கியுப்கள் அகற்றப்பட்டதற்காக ரூபா 15.6 மில்லியனிற்கான தொகையொன்று ஒப்பந்தக்காரரிடம் கம்பனி பெற்றுக்கொண்டிருந்தது. எனினும், மணல் அகற்றும் சந்தர்ப்பத்தில் பாதுகாப்பு கமரா முறையொன்றின் மூலம் கண்காணிப்பு செய்யப்பட்ட போதிலும் அதன் தகவல்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்காமை மற்றும் அகற்றப்பட்ட மணலின் எண்ணிக்கை தொடர்பாக தொழிற்துறை தகைமையுடைய உத்தியோகத்தர் மூலம் மணல் குறுக்குவெட்டு அளவு அறிக்கை பெற்றுக்கொண்டு பெறுமதி மதிப்பீடு செய்திருக்காமையால் உண்மையாகவே அகற்றப்பட்ட மணல் கியுப்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கிய பணத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது. | அகற்றப்பட்ட் கணிமம் 11,556 கியுப்கள் காணப்பட்டதுடன், ஒப்பந்தக்காரரினால் 12,000 கியுப்களுக்காக ரூபா 15.6 மில்லியன் தொகை கம்பனிக்கு செலுத்தியிருந்தது எனவும், பாதுகாப்புக் கமரா முறைமையினால் நாளாந்தம் சேகரமாகும் காட்சிகள் மென்பொருள் ஒன்றில் பதிவு செய்யப்படாததுடன், தலைமையலுவலத்தின் உதவி பொது முகாமையாளர் - பெருந்தோட்டம் செயற்திட்டத்தினால் அடிக்கடி பரிசோதனைகள் மேற்கொண்டு தலைவருக்கு எழுத்துமூல அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | முறையான விசாரணை நடாத்துவதற்கும் தொழில்நுட்ப உதவி பெற்றுக்கொண்டு அகற்றப்பட்ட மண்ணின் எண்ணிக்கையை கணித்து சரியான பெறுமதி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கம்பனிக்கு சொந்தமான 12 கிடங்குகளின் மணல், சேற்றுடனான மண் விற்பனை செய்வதற்கு 2021 ஆண்டு முதல் 2025 ஆண்டு வரை இடையிடையே உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டு ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்ததுடன், உடன்பட்டிருந்த அகழ்தல் எண்ணிக்கை 65,526 கியுப்கள் மற்றும் | 2025 மே 21 திகதியில் உள்ளவாறு ஒப்பந்தகாரரிடம் 22,692 கியுப்களுக்காக கிடைத்திருந்த வருமானம் ரூபா 31.12 மில்லினாக காணப்பட்டதுடன், 2024 ஆண்டின் போது கற் சுரங்கத்துறை இலக்கம் 06 இல் ஒரு கிடங்கில் மாத்திரம் | ஒட்டுமொத்த செய்முறை தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | எதிர்பார்த்த வருமானம் ரூபா 76.767 மில்லியன் தொகை எனினும், கிடைத்திருந்த வருமானம் 2025 மே 21 திகதியில் உள்ளவாறு 22,692 கியுப்களுக்காக ரூபா 31.12 மில்லியன் தொகை என அவதானிக்கப்பட்டது. அகழ்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த உண்மையான கியுப்களின் எண்ணிக்கை தொடர்பாக உறுதிப்படுத்திக்கொள்வதற்காக தொழில்நுட்ப அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் அகற்றப்பட்டிருந்த மண் கியுப்கள் எண்ணிக்கையின் சரியான தன்மையை உறுதிப்படுத்தப்படாததுடன், ஒவ்வொரு தோட்ட வலையங்களிலும் சேற்றுடனான மண் மற்றும் மணல் கியுப் ஒன்றின் விற்பனை விலை ரூபா 670 இற்கும் ரூபா 5,020 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்ட போதிலும், கியுப்பொன்றின் விலை தீர்மானிக்கப்பட்ட அடிப்படை கணக்காய்வில் கண்டறிய முடியவில்லை. மேலும், கிடங்குகள் அகழ்வு மேற்கொள்வதற்காக ஒப்பந்த வேலை வழங்கல் 2019 ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், கணக்காய்வுத் திகதி வரை இடையிடையே உடன்படிக்கை கால நீடிப்பு மேற்கொள்ளப்பட்டு அகழ்வு மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மண் அல்லது மணல் கியுப் அலகொன்றின் தற்போதைய சந்தை விலையுடன் சீராக்கம் மேற்கொண்டு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மதிப்பிடப்பட்ட கியுப் எண்ணிக்கையை விட மிகையாக 875 கியுப்கள் அகற்றப்பட்டிருந்தன. கணிய மணல் விலையை தீர்மானித்தல் புத்தளம் மாவட்ட செயலகத்தின் விலை நிர்ணயக் குழுவின் அறிக்கையின் படி மேற்கொள்ளப்பட்ட போதிலும், அந்த கூறுவிலைகள் அதிகரிக்கப்பட்டதனால் செய்முறை சாத்தியமான மூலவளப் பதிவேடொன்றின் மீது கனியங்களின் பெறுமதிக்காக விலையொன்று தீர்மானிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொண்டு சரியான மண் எண்ணிக்கைக்கு பணம் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மங்கலஎலிய தோட்ட வலையத்தை சேர்ந்த சினசோல தோட்டத்தில் அமைந்துள்ள குளத்தினை புனரமைக்கும் ஒப்பந்த வேலை மூன்று வருட காலம் கடந்திருந்தும் பாதியளவேனும் பூர்த்தி செய்வதற்கு முடியாமையினால் அந்த உடன்படிக்கையை இரத்துச் செய்து செயலாற்றுகை பிணைமுறியின் ரூபா 1,000,000 தொகையில் ரூபா 900,000 தொகை மீண்டும் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த சிறிய | சிறிய குளத்தை மறுசீரமைப்பு செய்வதற்காக தொழில்நுட்ப அலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எதிர் காலத்தில் வேலைகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | முறையான திட்டமொன்று மற்றும் மேற்பார்வையொன்று இன்றி செயற்திட்டத்தை செயற்படுத்தும் தரப்பினரை இனங்கண்டு முறைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கிடங்கில் நீர் தங்கியிருந்த போதிலும், புனரமைப்பு அலுவல்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு இருக்காமையால் அதன் சுவர் உடைந்திருந்த காரணத்தினால் நீர் வெளியே ஓடக்கூடிய நிலைமையொன்று காணப்பட்டது. | | |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சித் சுற்றறிக்கையின் 6.6 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | வரைவு வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது என. | மீளாய்வாண்டிற்கான வருடாந்த அறிக்கை விரைவாக தயாரித்து சமர்ப்பிப்பதற்கும் அடுத்த வருடங்களில் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிப்பதை உறுதிப்படுத்தக்கூடிய மேலைத்திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |